மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,35,47,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,95,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (23—4—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 19-43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

11. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

67. தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1990 ஏப்ரல் 21]

68. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

121. கோரிக்கை எண். 20—வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

122. வேளாண்மைத்துறை குறித்த செயல்வினை முறைத் திட்டம் 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

123. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் மீதான ஆய்வுரை, 1989-90 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

124. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மீதான ஆய்வுரை, 1989-90 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

125. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி யாளர்கள் இணையம் மீதான ஆய்வுரை, 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS